# க.பொ.த(சா/த)

# உதவிக்கருத்தரங்கு வினாத்தாள்கள்

# வரலாறு

# (2016 – 2019)

# பகுதி I

தொகுப்பு :- திரு.நா.செல்வச்சந்திரன்

யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

மாதிரி வினாத்தாள் 2016

1. இலங்கை வரலாற்றை தொடர்ச்சியாக கற்க உதவும் பிரதான உள்நாட்டு இலக்கிய மூலதாரமாக அமைவது.

   1. தீப வம்சம் 2. மகா வம்சம் 3. போதி வம்சம் 4. தாடா வம்சம்.

2. கண்டிக் கால சமூக கலாச்சார தகவல்களை பெற்றுக் கொள்ள உதவும் முக்கியமான வெளிநாட்டு இலக்கிய மூலாதாரமாக இருப்பது .

   1. சிலப்பதிகாரம் 2. சிலான் தீவின் அதிசயம்
   3. அன்றைய இலங்கை 4. பூ கோள சாஸ்திர பிரவேசம்.

3. படதொம்பலென மற்றும் கித்துல்கலபெலிலென என்பன பின்வரும் எந்த சுற்றாடல் வலயத்திற்கு உரியதாகும்.

   1. தாழ் நில உலர் வலயம 2. தாழ் நில இடை உலர் வலயம்
   3. ஈர வலயம் 4. இடை வெப்ப வலயம்.

4. ஊவா மாகாணத்தின் முன் வரலாற்றுக் காலத்துக்குரிய மயானமொன்று கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசம்.

   1. ஹல்தும்முல்ல 2. கல் சொஹன் மயானம் 3. யடிகல்பொத்த 4. இப்பன்கடுவ

5. அனுராதபுரத்தை குறிப்பதற்காக ‘‘நுருபுரம்’’ எனும் சொல் பயன்படுத்தப்பட்ட மூலாதாரமாவது.

   1. பனாகடுவ செப்பு சாசனம் 2. தோணிகல கல்வெட்டு
   3. வல்லிபுர பொற்சாசனம் 4. மிகிந்தலை சுவர் கல்வெட்டு

6. பருமக என்பவர் அரசனாக குறிப்பிட்டதாக சான்றுகளை முன்வைத்து ‘‘பொசனி அரசன்’’ என்பதை பயன்படுத்தியுள்ள கல்வெட்டு கிடைத்துள்ள பிரதேசம் யாது ?

   1. சிதுல் பவ்வ 2. எம்புல் அம்பே 3. சீகிரிய 4. பெரிய புளியங்குளம்

7. கீழே ‘‘அ’’ தொகுதியில் குறிப்பிட்டுள்ள அரச எண்ணக்கருக்களை ‘‘ஆ’’ தொகுதியிலுள்ள அரசர்களது பெயரோடு தொடர்புபடுத்தும் போது வரக்கூடிய சரியான விடையாவது

| ‘‘அ’’ | ‘‘ஆ’’ |
|---|---|
| 1. குபேரக்கடவுள் | A. நிஸ்ஸங்க மல்லன் |
| 2. நரேஷ்வர | B. மகாசேனன் |
| 3. சக்கரவர்த்தி | C. முதலாம் காசியப்பன் |
| 4. தெய்வீகத்தன்மை | D. குட்டகண்ண அபய |
| | E. துட்டகைமுனு |

   1. CEAD 2. DCAB 3. CDAB 4. ADCB

8. தென் இந்தியாவில் பத்தினி தேவாலயத்தை திறந்து வைக்கும் விழாவில் பங்கு பற்றி ‘‘பத்தினி’’ வழிபாட்டை இந்நாட்டில் ஆரம்பித்து வைத்த அரசன்.

   1. வோகாரிக திஸ்ஸ 2. 2ம் கஜபாகு 3. 1ம் கஜபாகு 4. வங்கநாசிக திஸ்ஸ.

9. சேனைப் பயிர்ச் செய்கையாளரிடமிருந்து அறவிட்ட ‘‘கெதி அட’’ மற்றும் ‘‘கெடு கனக’’ எனும் வரிகளை நீக்கிய அரசனாகக் கருதப்படுபவன்.

   1. 1ம் பராக்கிரமபாகு 2. 1ம் விஜயபாகு 3. 4ம் உதயன் 4. நிஸ்ஸங்கமல்லன்.

10. பண்டைய இலங்கையில் இருந்த சில கைத்தொழில்களுடன் கைத்தொழில் மற்றும் தொடர்புபட்ட நபர்களது பெயரும் கீழே ‘‘அ’’ ‘‘ஆ’’ பகுதிகளில் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாக இணைப்பதனால் கிடைக்கும் விடையாவது.

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. தங்கக் கைத்தொழில் | A. ததவய |
| 2. இரும்புக் கைத்தொழில் | B. துலாதார |
| 3. தந்தச் செதுக்கல் கைத்தொழில் | C. கபர |
| 4. நெசவுக் கைத்தொழில் | D. தடிக |

1. CADB 2. BCDA 3. DCAB 4. BDCA

11. பண்டைக் காலத்தில் இரும்புப் படிவுகளிலிருந்து இரும்பை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைத்த இடங்கள்.
   1. புளத்சிங்கள , பாஹியங்கல , குருவிட்ட படதொம்பகுகை
   2. கண்டி வேகிரிய ,சீகிரிய மேற்குப்பூங்கா
   3. பலாங்கொட சமனலவெவ , சீகிரிய , அலகொலவெவ
   4. அம்பாந்தோட்டை வெஹெரகம, பொலன்னறுவை முதுகல்ல.

12. வரலாற்றுக் முற்பட்ட காலத்தில் களிமண்ணால் பாத்திரங்கள் தயாரிக்கும் போது தொழிலநுட்பத்தினை உயர்ந்த விசேட விஞ்ஞானமாக பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தும் இடங்கள்
   1. உடஞ்சா மடம் 2. சமனலவெவ 3. பெரகல 4. தெடிகம

13. சுகாதாரம் மற்றும் வைத்தியம் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்த 18 வைத்தியசாலைகளை நிர்மாணித்ததாக வம்சக்கதைகளில் குறிப்பிடும் மன்னன்.
   1. 1ம் பாராக்கிரமபாகு 2. துட்டகைமுனு 3. புத்ததாச 4. முதலாம் உபதிஸ்ஸ

14. ஆரம்ப காலத்தில் பிரதான வீதிகளின் தூரத்தை அளப்பதற்காக நடப்பட்ட ‘‘காவுத கணு’’ கிடைக்கப்பெற்றுள்ள பிரதேசமாவது
   1. கட்டுகஹ கல்கே , வெலிகத்த 2. துனுமடலாகந்த, கொத்கந்த.
   3. அலகொலவெவ, தெஹிகஹ எலகந்த 4. சொரபொர வெவ , கல்பாய.

15. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீதி மன்றங்கள் இருந்ததற்கான தகவல்களை கொண்ட முதலாம் கஜபாகு மன்னனின் கல்வெட்டு அமைந்துள்ள இடம்.
   1. கொடவாய 2. ஹோபிடிகம 3. வெஸ்ஸகிரிய 4. சித்துல்பவ்வ

16. கரையோரப் பிரதேசங்களில் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வந்த முதலாவது ஆங்கில ஆளுநர்
   1. பிரட்றிக் நோர்த் 2. தோமஸ் மெயிட்லண்ட்
   3. றொபர்ட் சாமர்ஸ் 4. றொபர்ட் பிறௌன்றிக்.

17. கீழே "அ" தொகுதியையும் „ஆ" தொகுதியையும் பிழையின்றி இணைத்தால் கிடைக்கும் விடையாவது

| "அ" | "ஆ" |
| --- | --- |
| 1. குடிகள் | A. அரசனுக்கு உதவிய அதிகாரிகள் |
| 2. ரத்கொல் சமதரு | B. பரம்பரை அடிமைகள் |
| 3. அடிமை | C. பாதுகாப்பு அலுவலர்கள் |
| 4. மெய்காப்பர் | D. சாதாரண மக்கள் |

1. DBCA 2. ACDB 3. DABC 4. CADB

17. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகள் இடம்பெற்ற ஒழுங்கு முறையை வரிசைப்படுத்தினால் கிடைக்கும் சரியான விடையை தெரிவு செய்க.

A. பெபிலியான சுனேத்ரா தேவி பிரிவெனாவை செய்வித்தமை

B. பன்சிய பனஸ் ஜாதக நூலை சிங்கள மொழிக்கு மொழி பெயர்த்தமை.

C. கவிசிலுமின, விசுத்தி மார்க சன்னஸ போன்ற நூல்கள் எழுதப்பட்டமை

D. கடலாதெனிய விகாரையை கட்டுவித்தமை

1. BDAC 2. CDAB 3. ACBD 4. CBDA

18. கண்டி இராச்சிய காலத்தின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட தகவல்கள் எக் கடமைகளுக்காக பயன்படுத்தப்பட்டன ?

A திசாவைகள் 12 ஐக் கொண்டிருந்தமை. B கோறளையின் பொறுப்பான அதிகாரி

C லியனரால , உண்டியரால போன்ற அதிகாரிகள் இருந்தமை.

1. மாளிகைக்கு பொறுப்பான அதிகாரி 2. பிராந்திய நிர்வாகம்

3. வரி வசூலிப்பு 4. விகாரை நிலங்கள்

19.. மலைநாட்டு அரசர்களுக்கும் போர்த்துக்கேயர்களுக்கும் இடையில் நடைபெற்ற போர்களும் அப்போர்களில் தொடர்பு கொண்ட போர்த்துக்கேய தலைவரகளின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. "அ" தொகுதியுடன் "ஆ" தொகுதியை தொடர்புபடுத்துவதன் மூலம் கிடைக்கும் சரியான விடையாக அமைவது

| "அ" | "ஆ" |
| --- | --- |
| 1. தந்துரே | A. தியோகு த மேலோ கஸ்த்ரோ |
| 2. பலன | B. ஜரனிமோ த அஸவேது |
| 3. ரந்தனிவெல | C. பேரோ லோபெஸ் த சூசா |
| 4. கண்னொருவ | D. கொன்ஸ்தாஸின் தசா |

1. CBDA 2. BCAD 3. CABD 4. DACB

20. சீயம் நாட்டின் அரசனது உதவியை பெற்று வணக்கத்துக்குரிய புலத்கம தம்மாலங்கார சிறிசுமணதிஸ்ஸ தேரரினால் ஆரம்பிக்கப்பட்ட அச்சகமாவது.

1. லங்காபினவ 2. கவடகதிக

3. சுதர்ஷண 4. லங்கோபகார

21. கி.பி. 1638 மற்றும் கி.பி 1766 உடன்படிக்கைகள் தொடர்பான சரியான கூற்றினை தெரிவு செய்க.

1. மலைநாட்டு அரசர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளாகும்.
2. மலைநாட்டு அரசர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் அமைந்த உடன்படிக்கைகளாகும்.
3. மலைநாட்டு அரசர்களுக்கும் ஆங்கிலேயருக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளாகும்.
4. மலைநாட்டில் பிரதானிகளின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் உடன்படிக்கையாகும்.

22. வரலாற்று முக்கியத்துவம் பெற்ற கண்டி உடன்படிக்கையின் முதல் மூன்று வாசங்களிலும் வலியுறுத்தப்பட்டிருக்கும் காரணியாக அமைவது.

1. கண்டி இராசதானி ஆங்கிலேயருக்கு அடிமைப்படுதல்.
2 புத்த சாசனத்தையும் கிறிஸ்தவ சமயத்தையும் பாதுகாத்தல்.
3. கண்டி இராச்சியத்தல் நீதிமன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
4. ஸ்ரீ விக்ரம இராஜசிங்க அரசனுக்கும் அவனது உறவினர்களுக்கும் கண்டி இராச்சியத்தின் சிம்மாசன உரிமை நீக்கப்பட்டமை.

23. கி.பி. 1818 இன் சுதந்திர போரட்டத்தை தோல்வியடையச் செய்து ஆங்கிலேயருக்கு சார்பாக நடந்து கொண்டு சலுகைகளைப் பெற்றுக் கொண்ட பிரதானி.

1. மடுகல்லே நிலமே	2. மொல்லிகொட நிலமே.
3. கெப்படிபொல நிலமே	4. எஹலேபொல நிலமே.

25. பௌத்தமத மறுமலர்ச்சிக்கு பங்களிப்புச் செய்து அனுராதபுரத்தின் புனித இடங்களை பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்த பெருமைக்குரியவர்

1. அநகாரிக தர்மபால	2. மீகெட்டுவத்தே குணானந்த தேரா்
3. வலிசிங்க ஹரிச்சந்திர	4. ஜோன் த சில்வா

26. கோல்புருக் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒன்றையும் டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒன்றையும் முறையே கொண்டிருக்கும் விடையாக அமைவது.

1. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை கிடைத்தமையும் , கிராம சபைகள் நீக்கப்பட்டமையும்.
2. நிர்வாக குழுமுறையும் , மாகாண பிரதிநிதித்துவ முறையும்.
3. மாகாண பிரதிநிதித்துவம் ஆரம்பித்தமையும் இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டமையும் .
4. மலைநாடும் கரையோரப் பிரதேசமும் ஒன்றிணைக்கப்பட்டமையும் சர்வசன வாக்குரிமை கிடைத்தமையும்.

27. பிரபல தேசிய ஒழுங்கமைப்பின் தேவையை நிறைவு செய்யும் வகையில் அமைக்கப்பட்ட இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர்.

1. பொன்னம்பலம் இராமநாதன்	2. ஆதர் வீ தியெஸ்
3. டீ.பீ.ஜயதிலக	4. பொன்னம்பலம் அருணாசலம்

28. கோல்புருக் சீர்திருத்தத்துக்கமைய தனியார் துறையினரின் வியாபார நடவடிக்கைகளுக்கு இடமளிக்கும் வகையில் அரச வர்த்தக தனி உரிமையை இல்லாதொழித்த இரு வர்த்தக பொருட்களாவன.

1. முத்தும் யானைத் தந்தமும் 2. கறுவாவும் உப்பும்.
3. கோப்பியும் கறுவாவும் 4. பாக்கும் தேன் மெழுகும்

29. தொழிலாளர் போரட்டங்களுக்கு சக்தியை வழங்கி நகர்புற தொழிலாளர்களை ஒன்றுதிரட்டுவதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் யார் ?

1. A.E. குணசிங்க 2. கொல்வின் ஆர் த சில்வா 3. நடேச ஐயர் 4. என்.எம்.பெரேரா

30. இலங்கை முழுவதையும் ஒரே தேர்தல் தொகுதியாக அமைத்து நடத்தப்படும் தேர்தல்கள் இரண்டைக் கொண்டுள்ள சரியான விடையாவது.

1. மாகாண சபை தேர்தலும் உள்ளூராட்சித் தேர்தலும்.
2. சனாதிபதி தேர்தலும் பொதுசன அபிப்பிராயத் தேர்தலும்.
3. பாரளுமன்ற தேர்தலும் சனாதிபதி தேர்தலும்
4. பொதுசன அபிப்பிராயத் தேர்தலும் பாரளுமன்றத் தேர்தலும்

31. "இலங்கை சனநாயக சோசலிச குடியரசு" என எமது நாட்டை குறிப்பிட்ட அரசியல் யாப்பு சீர்திருத்தும் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

1. கி.பி. 1931 2. கி.பி. 1947 3. கி.பி. 1972 4. கி.பி 1978

32. மகாவலி அபிவிருத்திதிட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பிரதான இரு நீர் தேக்கங்களாவன.

1. உடவளவை , கல்லோயா 2. விக்டோரியா, உடவளவை
3. ரன் தம்பே , இராஜங்கனை 4. விக்டோரியா , ரந்தெனிகல

33. மறுமலர்ச்சிக் காலத்தின் கலைஞர்களின் தாயகமாக கருதப்படும் இத்தாலி நகரைக் குறிப்பது.

1. புளோரன்ஸ் 2. உரோம் 3. ஜெனிவா 4. வெனிஸ்

34. கைத் தொழிற் புரட்சிக் காலத்தில் புதிய கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் புதிய ஆக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாக தொடர்புபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையாவது.

| | |
|---|---|
| 1. ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ் | A. மீயூல் இயந்திரம் |
| 2. ரிச்சட் ஆக்ரைட் | B. உருக்கு உற்பத்தி உளை |
| 3. சாமுவேல் குரொம்டன் | C. நூல் நூற்கும் இயந்திரம் |
| 4. ஹென்றி பெஸமன் | D. பருத்தி நெய்யும் இயந்திரம் |

1. DBAC 2. BACD 3. BDAC 4. DCAB

35. கைத் தொழில் புரட்சி இலங்கையிலும் பரவியதனால் ஏற்பட்ட விளைவுகளுள் கொழும்பு கண்டி நெடுஞ்சாலையை அமைத்த பெருமைக்குரிய தேசாதிபதியானவர்

1. ஸ்டுவர்ட் மெகன்ஸி 2. ஹென்றி வோர்ட் 3. எட்வர்ட் பான்ஸ் 4. தோமஸ்மெயிட்லண்ட்

➢ இலக்கம் 36 - 37 வரையான வினாக்களின் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தை தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிக.

36. அமெரிக்க சுதந்திர போராட்டத்தின் முதலாவது அமெரிக்க கண்ட மகாநாடு ............................................ இடத்தில் நடைபெற்றது

1. நியூயோர்க் 2. பிலடெல்பியா 3. வோஷிங்டன் 4. லொஸ் என்ஜலீஸ்

37. நிர்வாகத்தில் சர்வதிகார போக்கினை தன்னகத்தே கொண்டு " நானே அரசு" என்று கூறிய மன்னன் ................................. ஆவான்.

1. 12 ஆம் லூயி 2. 16 ஆம் லூயி 3. 13 ஆம் லூயி 4. 14 ஆம் லூயி

38. இன்று செயலற்று இருக்கும் ஐக்கிய நாடுகளின் தாபனத்தின் பிரதான நிறுவனங்களில் ஒன்று

1. நம்பிக்கை பொறுப்புச் சபை 2. பாதுகாப்புச் சபை

3. சமூக பொருளாதார சபை 4. செயலகம்.

39. சுயஸ் கால்வாயை மக்கள் மயப்படுத்திய எகிப்திய சனாதிபதி.

1. பிரேங்லின் தி ரூஸ்வெல்ட் 2. அப்துல் கமால் நாசர்

3. வின்ஸ்டன் சேர்ச்சில் 4. வுட்ரோ வில்சன்

40. மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் "பனிப்போர்" என்பதன் கருத்து

1. உலகில் காலநிலை அழிவுகள், பாதிப்புக்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டு மோதலாகும்.
2. சமவுடமை நாடான கியூபாவிற்கு எதிராக நடத்ததிய போரட்டம்
3. உலக வல்லரசு நாடுகள் இரண்டு ஆயுத பாவனையைத் தவிர்த்து நடத்திய போரட்டம்
4. பெற்றோலிய திருட்டு தொடர்பாக ஈராக் குவைத் நாட்டை ஆக்கிரமித்தல்.

**2016**

**41.** பின்வருவனவற்றுள் மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட "டீகாவ" எனும் உரைநூல் எனக் கருதப்படுவது எது?

1 வினய அட்டகதா 2 வம்சத்தப்பகாசினி 3 ஜாதகட்ட கதா 4 உத்தர விகார அட்டகதா

**42.** சீகிரிய பொத்தான எந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால இருப்பிடத்தைச் சேர்ந்தது?

1 தாழ்நில உலர்வலயக் குகைகள் 2 மலையகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலம்

3 தாழ்நில ஈரவலயக் குகைகள் 4 கரையோர வெட்ட வெளிப் பாசறைகள்

**43.** பின்வரும் சோடிப் பதங்களில் ஒன்றுடன் ஒன்று பொருந்தாத சோடி

1 தன்னை நரேஸ்வர என அறிமுகம் செய்துகொண்டவன். - குட்டகண்ண அபயன்
2 மின்னேரித் தெய்வம் என வழிபடப்பட்டவன் - மகாசேன மன்னன்
3 "அலகபயமகாராஜா" எனும் பட்டத்தைப் பயன்படுத்தல் - முதலாம் முகலன் மன்னன்
4 "சக்கரவர்த்தி" எனும் எண்ணக்கருவைப் பயன்படுத்தல் - நிஸ்ஸங்கமல்ல மன்னன்

**44.** முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்வு

1 அரசியல் பாதுகாப்புக் கருதி அயல் நாடுகளுடன் விவாக உறவை ஏற்படுத்தியமை.
2 சோழர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்து இலங்கையை ஒன்றிணைத்தமை.
3 நாட்டின் பொருளாதார முன்னேற்றங் கருதி முக்கிய பணியாற்றியமை.
4 பல விகாரைகளைப் புனருத்தாரணம் செய்தமை.

45. "விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலக்க விடமாட்டேன்" எனக் கூறிய மன்னன் யார்?

1 வசப மன்னன் 2 மகாசேன மன்னன் 3 தாதுசேன மன்னன் 4 மகா பராக்கிரமபாகு

46. சமயம், மொழி ரீதியில் வேறுபட்டிருந்தாலும், தமது அண்டை நாட்டுப் பிரஜைகளுடன் நம்பிக்கையுடன் செயற்படுவது எமது புராதன ஆட்சியாளர்களின் வெளிநாட்டுக் கொள்கையில் தெளிவாகத் தெரியும் இயல்பாகும். இக்கூற்றை நிரூபிக்கும் உதாரணமாக அமைவது,

1 முதலாம் கஜபாகு மன்னன் பத்தினித் தெய்வ கோயில் ஒன்றின் திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டுத் தென் இந்தியாவிலுள்ள சேர இராச்சியத்தைச் சென்றடைதல்.

2 ஆறாம் அக்போ மன்னனால் சீனாவுடன் இராஜதந்திரிகள் தூதுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டமை.

3 முதலாம் விஜயபாகு மன்னன் தலதா மாளிகையின் பாதுகாப்பினை வேலைக்காரப் படையினருக்கு அளித்தமை.

4 முதலாம் பராக்கிரமபாகு மன்னன் பாண்டியருக்குப் படை உதவி அளித்தமை.

47. தென்னிந்திய கூலிப் படையினரின் உதவியை நாடிய முதலாவது உள்நாட்டு ஆட்சியாளர்களாகக் கருதப்படுபவர்கள்.

1 குட்டகண்ண தீசன், வொகாரிக தீசன் 2 முதலாம் சிறிநாகன், இளய நாகன்

3 வொகாரிக தீசன், அபயநாகன் 4 இளநாகன், அபயநாகன்

48. பண்டைக் காலத்தில் இலங்கையில் பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்ட கலைஞர் பெயர்கள் A பகுதியிலும் B பகுதியில் அவர்கள் மேற்கொண்ட கைத்தொழில்களும் காணப்படுகிறன. A உடன் B இனை இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| | |
|---|---|
| 1 கபர | A நூல் நூற்றல் |
| 2 தடிக | B சித்திரம் வரைதல் |
| 3 ததவய | C இரும்புத் தொழில் |
| 4 சித்தகர | D தந்தச் செதுக்கல் |

1 A D C B 2 B C A D 3 C A D B 4 C, D, A, B

49. வனைதற் சில்லு எனும் இயந்திரம் எப்பொருளைச் செய்யும் பொருட்டுப் பயன்படுத்தினர்?

1 இரும்புப் பொருட்கள் 2 மட்பாண்டம்

3 மர உற்பத்திப் பொருட்கள் 4 யானைத் தந்தத்தாலான பொருட்கள்

50. காற்றினால் ஏற்படும் நீர் அலைகளின் அழுத்தம் காரணமாக அணைக்கட்டு அரிப்புறுவதைத் தடுப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள குளத்தின் பகுதிகள் யாது?

1 மடைக்கதவு 2 குளக்கட்டு 3 அலைதாங்கி 4 கலிங்கல் தொட்டி

51. பண்டைய கட்டிடப் பொறியியலாளர்கள் உயரமான கட்டிடங்களை இடி மின்னலிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பொருத்திய உபகரணம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

1 மொஹல 2 தியகெட்ட பஹன 3 வஜ்ரசும்பட்ட 4 எல்லங்காவ

**52.** பண்டைய வைத்திய முறையின் சிறப்பினைக் காட்டும் சிறந்த எடுத்துக்காட்டு பெறப்பட்டது,

1அநுராதபுர அபயகிரி அகழ்வுகளில்
2 பொலன்னறுவை ஆலாஹன பிரிவேனாவின் அகழ்வுகளில்
3 அநுராதபுர உள்நகர் அகழ்வுகளில்
4 சீகிரியா அலகொல வெவ தெஹிகஹ அலகந்த அகழ்வுகளில்

**53.** மிருகக் கொலையைத் தடைசெய்யும் சட்டம் எந்த மன்னனால் அமுல் செய்யப்பட்டது?

1 ஆமண்ட காமினி அபயன் 2 4ம் மகிந்தன் 3 3ம் உதயன் 4 1ம் கஜபாகு

**54.** பின்வரும் சட்டங்களில் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான மிக முக்கிய சட்டமாக விளங்குவது,

1 குளங்களிலிருந்து நீரைப் பெறும் வயல்களில் நெல் தவிர பயறு பயிரிடக் கூடாது.
2 நீர் நிலைகளில் வாழும் பறவைகளைக் கொல்லக் கூடாது.
3 எருமை, பசுக்கள், ஆடுகள் என்பவற்றைக் கொலை செய்வோருக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.
4 உயர் நிலங்களில் உள்ள காடுகளை அழித்தல் ஆகாது.

**55.** கோட்டையில் காவல் அரண் அமைத்தல். ஆரிய சக்கரவர்த்தியின் வரி அறவிடுவோரைத் தண்டித்தல். மன்னனின் பிரதான அமைச்சனாக செயற்படுதல். மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய நபர்.

1 சேனாதிலங்கார செனவிரத் 2 நிஸ்ஸங்க அழகேஸ்வர
3 வீர அழகேஸ்வர 4 அம்புலுகல இளவரசன்

**56.** "அ" பிரிவில் இலக்கிய நூல்களும் "ஆ" பிரிவில் அதனுடன் தொடர்புடைய இராசதானிக் காலமும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சரியான முறையில் இணைக்கும்போது பெறப்படும் விடை.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1 தலதா சிரித்த | A பொலன்னறுவை |
| 2 குத்தில காவியம் | B தம்பதெனிய |
| 3 கவு சிலுமின | C குருணாகல் |
| 4 சத்தர்மலங்கார | D கம்பளை |
| | E கோட்டை |

1 A B D E 2 B E C D 3 C B D E 4 C E B D

**57.** பின்வரும் தகவல்களில் முதலாம் விமலதர்மசூரிய மன்னனுக்கு மாத்திரம் பொருத்தமாக அமைவது,

A - குசுமாசனதேவியை மணஞ் செய்தல்.
B - தந்துரே போரில் போர்த்துக்கேயரைப் படுதோல்வி அடையச் செய்தல்.

C - ரந்தெனிவலப் போரில் தலைமை வகித்தல்.

D - போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றல்.

1 A B    2 A D    3 B C    4 C D

**58.** போர்த்துக்கேயர் கண்டி இராசதானியைக் கைப்பற்றும் பொருட்டு மேற்கொண்ட போர்களில் தொன் ஜெரனிமோ த அசுவேது நடாத்திய போர்.

1 தந்துரேப் போர்.    2 பலனப் போர் 3 ரந்தெனிவலப் போர் 4 கன்னொறுவாப் போர்

**59.** போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண இராசதானிக்குமிடையே மோதல்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணம்

1 சங்கிலி மன்னனின் ஆட்சிக் காலத்தில் போர்த்துக்கேய வர்த்தகக் கப்பல்களுக்குத் தடை ஏற்பட்டமை.

2 மன்னரைச் சூழவுள்ள பிரதேசங்களில் முத்துக் குளித்தலில் போர்த்துக்கேயர் பெற்ற இலாபம் இல்லாமல் போனமை.

3 கறுவா, மிளகு போன்ற வர்த்தகப் பொருட்களை யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து பெற்றுக்கொள்வதில் தடை ஏற்பட்டமை.

4 விதிய பண்டாரன் யாழ்ப்பாணத்திற்குத் தப்பிச் சென்றபோது சங்கிலி மன்னன் அவனை ஏற்றுக் கொண்டமை.

**60.** கண்டி இராச்சியத்தின் சட்டபூர்வமான உரிமையை ஆங்கிலேயர் உறுதிப்படுத்திக் கொண்டது,

1 ரொபட் பிரௌன்றிக் ஆளுநரின் ஆக்கிரமிப்பின் மூலம்

2 ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை சிறைப்பிடித்ததன் மூலம்

3 1815 ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கையின் மூலம்

4 1818 ஆம் ஆண்டு பிரகடனத்தை வெளியிட்டதன் மூலம்

**61.** கோல்புறூக் குழுவினால் ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்கும் பொருட்டு முன் வைக்கப்பட்ட ஆலோசனை

1 நாட்டை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தல்.

2 சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என்பவற்றை ஏற்படுத்தல்.

3 கண்டியையும் தாழ்நிலப் பிரதேசங்களையும் இணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல்.

4 அரசின் வர்த்தக ஏகபோக முறை அகற்றப்பட்டமை.

**62.** மனிங் அரசியல் சீர்திருத்தத்தில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் அடங்கிய விடை

A - சட்டவாக்கக் கழகத்தில் முதன்முதலாக உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகமாகக் காணப்படல்.

B - படித்த இலங்கையர்கள் சார்பாக பிரதிநிதியொருவரை சட்டவாக்கக் கழகத்திற்கு நியமித்தல்.

C - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகஞ் செய்தல்.

D - நிருவாகக்குழு முறை அறிமுகஞ் செய்யப்படல்.

1 A B 3 A C 4 B C 2 B D

- பின்வரும் அட்டவணையிலுள்ள A - J வரையிலான தகவல்களின் அடிப்படையில் 23 ஆம் 24 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| வருடம் | பிரித்தானிய ஆளுநர் | சுதேசத் தலைவர்கள் |
|---|---|---|
| A 1803 | D டொரிங்டன் பிரபு | G கொங்காலேகொட பண்டா |
| B 1818 | E பிரடரிக் நோர்த் | H கெப்பட்டிப்பொல |
| C 1848 | F றொபட் பிரௌன்றிக் | J ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் |

**63.** மெக்டோவலின் கீழ் கண்டி இராசதானியின் ஆக்கிரமிப்பு தொடர்பான தகவல் அடங்கிய விடை,

1 A E J 2A F G 3B F H 4C D J

**64.** பிரித்தானியரது ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதலாவது விடுதலைப் போராட்டம் தொடர்பான தகவல்கள் அடங்கிய விடை

1A D G 2B E J 3B F H 4 C F J

**65.** 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கான அண்மைக் காரணம்

1 1840 ஆம் ஆண்டு அமுல் செய்யப்பட்ட தரிசு நிலச் சட்டம்

2 அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பில் விரிசல் ஏற்படல்.

3 அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கை

4 புதிய நீதிமன்ற முறை அறிமுகஞ் செய்யப்பட்டமை.

கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள சோடிப்பதங்களின் அடிப்படையில் 26 - 28 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

A - 1. உப்பு, கறுவா ஆகியவற்றின் ஏகபோக உரிமையை நீக்குதல்.
2. தனியார் நிறுவனங்கள் வர்த்தகத்தில் ஈடுபடல்.

B- 1. கோப்பிப் பயிர்ச் செய்கை
2. ஹமிலியா வெஸ்டர்டிரிக்ஸ்

C- 1. தேயிலைப் பயிச்செய்கை
2. லுல்கந்துர பெருந்தோட்டம்

D- 1. தென்னைப் பயிர்ச் செய்கை
2. ஜேம்ஸ் டேலர்

**66.** முதலாவது விடயத்தால் இரண்டாவது வளர்ச்சியைக் காட்டும் சோடிப் பதம் எது?

1 A 2 B 3 C 4 D

**67.** முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லாத சோடி எது?

1 A 2 B 3 C 4 D

**68.** இரண்டாவது முதலாவதன் அழிவிற்குக் காரணமாகியதை வெளிப்படுத்தும் சோடி எது?

1 A 2 B 3 C 4 D

**69.** பின்வரும் நிகழ்வுகளைக் காலவரன் முறைப்படி அட்டவணைப்படுத்தினால் பெறப்படும் சரியான விடை

A - நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியுடன் அரசியல் யாப்பினை வகுத்தல்.

B - சிங்கள மொழியை அரசகரும மொழி ஆக்கியமை

C - எஸ்.டப்ளியு.ஆர்.டீ. பண்டாரநாயக்கா ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகியமை.

D - எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சம்'டிக் கட்சியை நிறுவுதல்.

4 A D C B    3 C B D A    2 D B A C    1 D C B A

**70.** பின்வருவனவற்றில் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் 18 ஆவது உறுப்புரிமையில் எது தொடர்பாகக் குறிப்பிடப்படுகிறது?

1 பிரதம மந்திரியும் அமைச்சரவையும் 2 நீதிமன்றத் தொகுதியும் நீதி வழங்கலும்

3 தேசிய அரசப் பேரவையும் சட்டமியற்றலும் 4 அடிப்படை உரிமையும் பல்வேறு சுதந்திரமும்

**71.** 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய சங்கத்தை உருவாக்க சிங்களத் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமக்கள் தலைவர்

1 சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் 2 ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்

3 அறிஞர் எம்.சி. சித்தி லெப்பை அவர்கள் 4 சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள்

**72.** மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் பொல்கொல்லையில் நதியை திசைதிருப்பி சுதுகங்கையில் சேரும் நீர் எந்த நீர்த்தேக்கத்தின் ஊடாக உலர் வலயத்திற்கு வழங்கப்படுகிறது?

1 விக்டோரியா    2 கொத்மலை    3 போவதென்ன 4 ரன்டெம்பே

**73.** மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியலில் ஏற்பட்ட மிக முக்கிய மாற்றமாக விளங்குவது

1 மன்னர்கள் நிர்வாகத்தில் மத்திய வகுப்பினரின் உதவியைப் பெற்றுக் கொண்டமை

2 தேசிய வாதம் வளர்ச்சியுற்றமை

3 அனைத்து அதிகாரங்களும் அரசனைச் சார்ந்திருந்தமை

4 பிரதேச அரசுகள் ஒன்றிணைந்தமை.

கொடுக்கப்பட்டிருக்கும் படத்தினை அடிப்படையாகக் கொண்டு 34ஆம் 35ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

**74.** இந்தப் படத்தில் காட்டப்படும் செயல் கைத்தொழில் புரட்சியுடன் தொடர்புடைய எக்கைத்தொழிலுடன் தொடர்புடையது?

1 சுரங்கம்    2 விவசாயம்    3 நெசவு    4 போக்குவரத்து



**75.** உருவில் காணப்படும் செயலை மேலும் இலகுவாக்கிக் கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்ட புதிய உற்பத்தி யாது?

1 நீராவி இயந்திரம்    2 பாதுகாப்பு விளக்கு

3 இரும்புக் கேபிள் கம்பி    4 ரோலர் இயந்திரம்

**76.** "அ" பகுதியிலுள்ள கூற்றுக்களை "ஆ" பகுதியிலுள்ள வரலாற்று நிகழ்வுடன் ஒப்பிடும்போது பெறப்படும் சரியான விடை

| "அ" | "ஆ" |
|---|---|
| 1 பொஸ்டன் தேநீர் விருந்து | A முதலாம் உலக மகாயுத்தம் |

2 சமவுடைமைக் கருத்தைக் கொண்ட நாடு உருவாகுதல். B அமெரிக்கப் புரட்சி

3 பிரான்ஸ் பேர்டினன்ட்டும் அவனது மனைவியும் கொலை செய்யப்படல் C ரஸ்யப் புரட்சி

4 பேர்ள் துறைமுகம் தாக்கப்படல் னு இரண்டாம் உலக மகாயுத்தம் E பிரான்சியப் புரட்சி

1 B C A D 2 B E A D 4 D C A E 3 D E C B

**77.** ரஸ்யப் புரட்சி வெற்றி பெறுவதற்கான முக்கிய காரணம்

1 நாடு முழுவதும் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டமையும் பாணின் விலை அதிகரித்தமையும்

2 விவசாயத்தை விடத் தொழிற்சாலைகளில் ஆயுதங்களின் உற்பத்தி அதிகரித்தமை

3 தொழிலாளர் விவசாயிகளுடன் படை வீரர்களும் புரட்சியில் இணைந்து கொண்டமை.

4 ஆயுதந் தரித்த குழுவினர் அரசாங்கத்தின் முக்கிய மத்திய நிலையங்களைக் கைப்பற்றல்.

**78.** A - ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசன் கொலை செய்யப்படல்.

B - பிஸ்மார்க்கின் வெளிநாட்டுக் கொள்கை

C - ஹிட்லரின் செயற்பாடு

D - ஜப்பானின் செயற்பாடு

இவற்றுள் முதலாம் உலக யுத்தம் தொடர்பாக

1 A யும் B யும் சரியானவை, C யும் D யும் பிழையானவை.

2 A யும் C யும் சரியானவை, B யும் C யும் பிழையானவை

3 B யும் C யும் சரியானவை, A யும் C யும் பிழையானவை.

4 C யும் D யும் சரியானவை, A யும் B யும் பிழையானவை.

**79.** ஐக்கிய அமெரிக்க அரசுகள் இரண்டாம் உலக யுத்தத்தில் பங்கு பற்றுவதற்கான அண்மித்த காரணம்

1 ஜேர்மனிக்கு எதிராக பிரான்ஸ் யுத்தப் பிரகடனம் செய்தமை.

2 ஹிட்லர் போலாந்தை ஆக்கிரமித்தமை

3 யப்பான் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியமை 4 ஜேர்மனி ரஸ்யாவை ஆக்கிரமித்தமை.

**80.** தற்காலத்திலும் பாதகமான விளைவுகளை அனுபவிக்கும் இரண்டாம் உலக யுத்தத்தின் செயற்பாடாக விளங்குவது

1 ஜேர்மனி, யப்பான் உட்பட அச்சு நாடுகள் தோல்வியுற்றமை

2 ஐம்பது மில்லியனுக்கும் அதிகமான உயிர் சேதங்களும் பொருட் சேதங்களும் ஏற்பட்டமை.

3 ஜேர்மனியின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் பல மில்லியன் யூதர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டு கொல்லப்பட்டமை.

4 யப்பானுக்கு எதிராக அணுகுண்டைப் பயன்படுத்தியமை.

**2017**

81 மகாவம்சத்தை எழுதிய மகாநாம தேரரின் வசிப்பிடம்

1. ஆலாஹனபிரிவெனா 3. திக்சந்தசெனவியா பிரிவெனா 2. பத்மாவதிபிரிவெனா 4. காரகல பிரிவெனா

82. மகாவம்சம், தீபவம்சம் ஆகிய நூல்களிற்கு அடிப்படையாக அமைந்த நூல்களாகக் கருதப்படகூடியவை

1. சிஹல அட்டகதா, வினய அட்டகதா 3. மயுர சந்தேசிய, திசர சந்தேசிய
2. சூழவம்சம், பூஜாவலிய 4. போதிவம்சம், தூபவம்சம்

83. இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் இலங்கைபற்றியறிந்து இலங்கை பற்றிய குறிப்புகளை எழுதிய தேசாஞ்சாரி

1. பாகியன் தேரர் 2. ஹியுங் சாங் 3. இபின் பதூதா 4. அரிஸ்ரோட்டில்

84. சித்தாறும்பி புத்தநாயக என்னும் அதிகாரிக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதங்கள் பற்றி குறிப்பிடும் சாசனம்.

1. வல்லிபுரம் பொற்சாசனம் 3. பனாக்கடுவ செப்பு சாசனம்.
2. கல்பொத்த சாசனம் 4. ஹோபிட்டி கம கல்வெட்டு

85. இலங்கையின் மிகப் புராதன கல்வெட்டுக்கள் எழுதப்பட்டுள்ள மொழி

1. சிங்களம் 2தமிழ் 3. பாளி 4. பிராமி

86. "பிளைத்தோசின்" எனப்படும் புவியியற் காலகட்டத்தில் முனைப்பாகக் காணப்பட்ட காலநிலைப்பண்பு

1. அதிகளவு வெப்பம் 3. அதிகளவு மழைவீழ்ச்சி 2. அதிவேக காற்று 4. அதிகளவு பனி

87. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில உலர்வலயக்குகைகளுக்கு உதாரணமாக கொள்ளகூடிய இடம்

1. மினிஹாகல்கந்த 3. பாகியன்கல 2. சீகிரிய பொத்தான 4. பெல்லன்பதி பெலஸ்ஸ

88. சுமார் 12500 வருடங்களுக்கு முன்பே இலங்கையில் வாழ்ந்த மனிதன் தீயின் உபயோகத்தை உணவுத்தயாரிப்பின்போது பயன்படுத்தியிருந்தமை தொடர்பான ஆதாரம் கிடைக்கப்பெற்ற குகை.

1. பாகியன்கல 3. கித்துன்கல பெலிலென குகை
2. சீகிரிய அலிகல குகை 4. பட்டதொம்ப குகை

89. முன்வரலாற்றுக் காலமானது தொழினுட்ப அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுகின்றுது இக்காலகட்டம் கொண்டிருந்த பிராதான தொழினுட்ப மாற்றம்.

1. நெருப்பின் உபயோகம் 3. கேத்திரகணித கல்லாயுதங்கள
2. இரும்புலோகத்தின் உபயோகம் 4. கல்லறை மயானங்கள்

90. முன்வரலாற்றுக்கால பெண்கள் தம்மை அழகுபடுத்தி கொள்வதில் அதிக ஆர்வம் காட்டியமையை வெளிப்படுத்துவது

1. அவர்கள் கல்வியறிவில் மேம்படடிருந்தமை. 2அக்காலத்தில் நாகரீகம் மேம்பட்டிருந்தமை
3. வெளிநாடுகளிலிருந்து ஆபரணங்கள் இறக்குமதியானமை
4. பெண்களின் நிலை சமூகத்தில் உயர்மட்டத்தில் காணப்பட்டமை

91. சுமணவாவிகாம, விஹரவாவிகாம போன்ற கிராமங்கள் எவ்வகையான கிராமங்களாகும்.

1. விவசாயம் சார்ந்த கிராமங்களாகும். 2. குளக்குடியேற்றக் கிராமங்களாகும்.
3. தொழில் அடிப்படையிலமைந்த கிராமங்களாகும்.
4. செயற்பாட்டடிப்படையிலமைந்த கிராமங்களாகும்

92. பனாக்கடுவ செப்புசாசனம் நுருபுரம் என அழைக்கும் இன்றைய நகரம்
1. அநுராதபுரம் 2. பொலனறுவை 3. கண்டி 4. யாழ்ப்பாணம்

93. அநுராதபுரம் பெரிய புளியன்குளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு சுமணவின் குடும்பம் குகையொன்றை சுத்தம் செய்து பிக்குமாருக்கு தானமளித்ததைக் கூறுகின்றது.” இதன் மூலம் பெறக்கூடிய வரலாற்றுச் செய்தி.
1. பலரும் இவ்வாறு குகைகளில் வசித்தனர் என்பது
2. பிக்குகள் உயர்வாக மதிக்கப்பட்டனர் என்பது
3. இல்லத்தலைவர்கள் சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றனர் என்பது
4. அநுராதபுரத்தில் பௌத்த சமயம் வேரூன்றி இருந்ததென்பது

94. “வெவ்பிரபாதனய” என பொதுவிலும் உலர்வலயங்களில் “எல்லங்காவ” எனவும் அழைக்கப்பட்ட குளத்தொகுதிகள் உருவாக்கப்பட்ட நோக்கம்
1. கிராமங்களின் எல்லைகளை விஸ்தரித்தல் 2. கிராம நீர் விநியோகத்தை மேற்கொள்ளல்
3. கிராமங்களுக்கிடையே ஏறபடும் நீர் தொடர்பான பிரச்சினையைத் தீர்த்தல்
4. கிராமமக்கள் நீணடகாலமாக எதிர்நோக்கிய நீர் பிரச்சனையை தீர்த்தல்

95. மன்னர்கள் தங்களை “நரேஸ்வர” குபேரக்கடவுள் போன்ற வடிவங்களில் வெளிப்படுத்தியமை எக்கோட்பாட்டை பிரதிபலிக்கின்றது.
1. மக்கள் மனதில் தம்மை ஆண்டவன் மறறும் போதிசத்துவராக காட்டும் உயர்வு கோட்பாட்டை
2. மக்கள் மத்தியில் தம்மை அழிக்க முடியாது என்ற எண்ணத்தை உருவாக்க
3. நாட்டை ஆள்வதை இலகுபடுத்த
4. தமக்கு இறை ஆசீர்வாதம் உண்டு என்பதை வெளிப்படுத்த

96. யாழ்ப்பாணப் பிரதேசத்தை வசப மன்னன் காலத்தில் ரிஷிகிரி எனப்படும் அரசன் நிர்வகித்தான் எனக் கூறும் சாசனம்.
1. வல்லிபுரம் பொற்சாசனம் 3. பனாக்கடுவ செப்புசாசனம்
2. கல்பொத்த சாசனம் 4. சங்கமு விகாரை சாசனம்.

97. வசப மன்னனை 16 பெரிய குளங்களை அமைக்கத் தூண்டிய நிகழ்வு
1. இலம்பகர்ண வம்சத்தவர்களின் பெருமையை நிலைநாட்ட
2. இந்தியாவின் கிருஸ்ணா நதிக்கரைகளில் ஏற்பட்ட பஞ்சம்.
3. அதிக குளங்களை அமைத்து மக்கள்மனதில் இடம்பிடிக்க.
4. நெல் உற்பத்தியில் தன்னிறைவடைய

98. கி.பி 9ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் “சபாவ” என குறிக்கப்படுவது
1. அரசபை 3. நீதிமன்றம் 2. வைத்தியசாலை 4. பிக்குகளின் சங்கம்

99. வரலாற்று மூலாதாரங்களில் “உபசக்க ரோகநாச”, “பஸவந்த நாமசாலை” போன்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்ட துறை
1. கல்வித் துறை 3. விவசாய துறை 2. வைத்திய துறை 4. நீர்பாசனதுறை

100. கீழ்வரும் வரலாற்று நிகழ்வுகளை கருதுக.

A- திரிபிடகம் மாத்தளை அலுவிகாரையில் வைத்து நூல் உருவாக்கப்பட்டமை

B- சரசோதி மாலை எனப்படும் தமிழ் நூல் எழுதப்பட்டமை

C- செங்கோ இலங்கை மீது படை எடுத்தமை

D- குசயாதகத்தை அடிப்படையாகக் கொண்டு கவிசிலுமின என்னும் நூல் எழுதப்பட்டமை

மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளை அவை இடம்பெற்ற கால ஒழுங்கில் கொண்டுள்ள சரியான விடை யாது?

1. ACDB 2. ADCB 3. DACB 4. DBCA

101. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் தொடர்பான கீழ்வரும் கூற்றுகளுள் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1. இவனிடம் பரம்பரையான சட்ட பூர்வ ஆட்சி உரிமை காணப்பட்டது.
2. றோமன் கத்தோலிக்க சமயத்தை கைவிட்டு பௌத்த சமயத்தைத் தழுவிக்கொண்டான்.
3. கண்டி தலதாமாளிகையை அமைப்பித்தான்.
4. தந்துரே, பலன போர்களில் போர்த்துக்கேயர்களை தோல்வியடையச் செய்தான்

102. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த இறுதி அரசன் யார்?

1. புவிராஜசேகரன் 2. சங்கிலியன் 3. பரராஜசேகரன் 4. வரோதய சிங்கையாரியன்

கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 103ஆம் 104ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| அரசன் | இடம் | பட்டப்பெயர் |
|---|---|---|
| A 6ம் புவனேகபாகு | D தம்பதெனியா | G சவுளு விஜயபாகு |
| B 2ம் பராக்கிரமபாகு | E குருநாகல் | H கலிகாலசாகித்திய சர்வங்ஞபண்டித |
| C 4ம் விஜயபாகு | F கோட்டை | J சப்புமல்குமாரன் |

103. கோட்டை இராச்சியத்துடன் தொடர்புடைய அரசனையும் அவன் கொண்டிருந்த பட்டப்பெயரையும் குறிப்பிடப்பட்டுள்ள விடை எது?

1. BH 2. AF 3. AJ 4. CG

104. 2ம் பராக்கிரமபாகு ஆட்சி புரிந்த இடத்தையும் அவனது பட்டப்பெயரையும் குறிப்பிடும் விடை

1. FG 2. EJ 3. DJ 4. DH

105. அரசனுக்குப் பின் மருமகனுக்கு(சகோதரியின் மகன்)அரசுரிமை சென்ற இராச்சியம் யாது

1. அநுராதபுரம் 2. கம்பளை 3. கண்டி 4. யாழ்ப்பாணம்

106. போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தை கைப்பற்றியமை தொடர்பில் மிக முக்கிய பங்களிப்பை வழங்கிய செயற்பாடு பின்வருவனவற்றுள் எது

1. 1521 இல் இடம்பெற்ற விஜயபாகு கொலை.
2. கோட்டை மூன்று இராச்சியமாக பிரிக்கப்பட்டமை
3. 7ம் புவனேகபாகு மற்றும் மாயாதுன்ன இடையேயான மோதல்
4. தர்மபாலன் நன்கொடை சாசனம் எழுதியமை.

கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 107 ஆம் 108 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A- அமெரிக்கன் மிஷனரி B- ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரர்

C- ஹென்றிஸ்டீல்ஒஸ்கொட் D- உதயபானு பத்திரிகை

107. இந்து சமய மறுமலர்ச்சி, இஸ்லாம் சமய மறுமலர்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை ஒழுங்கு முறையில் உள்ளடக்கிய விடை யாது

1. D,E 2. A,B 3. D,B 4. E,A

108. யாழ்ப்பாணத்தில கல்வி வளர்ச்சி மற்றும் பௌத்தஆங்கில பாடசாலைகள் தொடர்புடைய தகவல்களை ஒழுங்கு முறையில் உள்ளடக்கிய விடை யாது

1. B,C 2. A,C 3. A,B 4. E,D

109. 1818 கண்டி பிரகடனத்தை வெளியிட்டு கண்டி பூரணமாக பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்ததை வெளிப்படுத்திய ஆளுநர்

1. பிரட்றிக் நோத் 3. றோபேட் பிரவுண்ரிக் 2. எட்வேட் பாண்ஸ் 4. வில்லியம் கோல்புறூக்

110. இலங்கையருக்கு நிர்வாக குழுமுறையை அறிமுகம் செய்த அரசியல் சீர்திருத்தம் எது

1. கோல்புறூக் 2. டொனமூர் 3. குறூமக்கலம் 4. சோல்பரி

111. இலங்கையில் காணப்படும் சில அரசியல் கட்சிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A- ஐக்கிய தேசியக் கட்சி B- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

C- சமசமாஜக்கட்சி D- தமிழரசுக் கட்சி

மேற்குறிப்பிடப்படும் கட்சிகளுள் சுதந்திரம் கிடைப்பதற்கு முன் உருவாக்கப்பட்ட கட்சிகளை குறிப்பிடும் விடை யாது

1. BC 2. AD 3. AB 4. AC

112. சட்டவாக்க கழகம்,அரசுக்கழகம்,பாராளுமன்றம் போன்ற நிறுவனங்கள் கொண்டிருந்த பொதுப் பண்பு

1. இவை பிரித்தானியரால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தமை
2. அதிகளவில் கல்விகற்றோர் இதன் பிரதிநிதிகளாக காணப்பட்டமை
3. இலங்கை மக்களுக்கு நிர்வாக பயிற்சி அளித்தமை
4. நாட்டுக்குத் தேவையான சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொண்டிருந்தமை

113. மத்திய காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக பல்வேறு துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.கீழ்வருவனவற்றுள் எத்துறையில் பெரசல்சஸ் முக்கிய இடம் பெற்றார்

1. மருத்துவ விஞ்ஞானம் 3. ஓவியக்கலை 2. நாடுகாண் பயணங்கள் 4. இலக்கியம்

114. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆசியக்கண்டத்தில் கைத்தொழில் துறையில் முன்னேற்றம் கண்ட ஒரே நாடு

1. சீனா 2. இந்தியா 3. சிங்கப்பூர் 4. ஜப்பான்

115. கைத்தொழில் புரட்சியின் விளைவுகளை இலங்கையும் அனுபவிதத்து அந்த வகையில் இலங்கையில் ஏற்பட்ட முன்னேற்றங்களில் ஒன்று

1. இலங்கையில் பிரித்தானியரால் இரட்டை நிர்வாக முறை அறிமுகம் செய்யப்பட்டமை
2. இலங்கையில் செல்வந்தர்கள் உருவாக பிரித்தானியாவின் கைத்தொழில் புரட்சி

உதவியது.

3. பெருந்தெருக்களை அமைக்கும் நிலை ஏற்பட்டது.

4. இலங்கை மாணவர்களுக்கு மிசனறிகள் கல்வி போதித்தமை

கீழே **A,B,C,D** ஆகியவற்றினால் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 116 தொடக்கம் 118 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A- 1 மறுமலர்ச்சி
 2 மானியமுறை
B- 1 சர்வதேசசங்கம்
 2 ஐக்கியநாடுகள் சபை
C- 1 கொன்தாந்திநோபிள் நகரம் வீழ்ச்சியடைந்தமை
 2 பேள் துறைமுகம்மீதான தாக்குதல்

116. முதலாவதின் தோல்வி இரண்டாவதைக் கட்டியெழுப்ப உதவிய விடயச்சோடி யாது?

1. A 2. B 3. C 4. D

117. முதலாவதின் தோற்றத்திற்கு இரண்டாவதின் வீழ்ச்சி காரணமாக அமைந்த விடயச்சோடி

1. A 2. B 3. C 4. D

118. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையில் எதுவித தொடர்பையும் காட்டாத விடயச்சோடி யாது?

1. A 2. B 3. C 4. D

119 “பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை” என்ற கோசத்துடன் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்

1. ரஷ்ய புரட்சி 3. பிரான்சிய புரட்சி 2. சீனப் புரட்சி 4. அமெரிக்க சுதந்திர போர்

120. 1ம் உலகப் போரில் அமெரிக்கா பங்கு கொள்ள காரணமாக அமைந்த சம்பவம்

1. பேள் துறைமுக தாக்குதல் 3. லூசித்தானியா கப்பல் மீதான தாக்குதல்

2. பொஸ்டன் தேனீர் விருந்து 4. பெல்ஜியம் மீதான தாக்குதல்

**2018**

121) இலங்கையின் வரலாற்றை அறிய உதவுகின்ற மிகப்பழமையான உள்நாட்டு இலக்கிய மூலதாரமான நூல் பின்வருவனவற்றுள் எது?

(1) தீபவம்சம் (2) மகாவம்சம் (3) சூழவம்சம் (4) போதிவம்சம்

122) அநுராதபுரத்திலுள்ள புனித வெள்ளரசு மரத்தின் வரலாற்றைக் கூறும் நூல்

(1) தடாவம்சம் (2) சூழவம்சம் (3) மகாவம்சம் (4) மகாபோதிவம்சம்

123) நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா என்னும் நூலை எழுதியவர்

(1) பாகியன் தேரர் (2) இபன்பதூதா (3) பிளினி (4) பிலிப்ஸ் பல்டியஸ்

124) கி.பி. 11 ஆம் 12 ஆம் நூற்றாண்டு கால இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும்

பனாகடுவ செப்பு சாசனத்துடன் தொடர்புடைய மன்னன்

(1) 1ம் விஜயபாகு (2) 1ம் பராக்கிரமபாகு (3) நிசங்கமல்லன் (4) வீரபராக்கிரமபாகு

125) கி. பி. 5ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்து அபயகிரி விகாரையில் தங்கியிருந்த சீனப் பிக்கு

(1) ஹியுங் சாங் பிக்கு (2) பாஹியன் தேரர் (3) அல்பலசூரி (4) ரிபைரோ

126) இலங்கையில் முதன்முதலில் குடியேறிய மனித இனம்.

(1) ஆதிஹோமோசேப்பியன் (2) நியாண்டதால் (3) காக்கேசியன் (4) டெனிஸோவன்கள்

127) 35000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித சமூகத்தின் வாழிடமாகக் கருதப்படுகின்ற களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள தாழ்நில ஈரவலயக் குகை

(1) பட்ட தொம்பலென (2) குருவிட்ட (3) பெல்லன் பதிபெலஸ்ஸ (4) பாகியன்கல

128) முன் வரலாற்றுக் காலத்தில் இறந்த ஒருவருக்கு மரணச் சடங்கு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட களிமண் ஓட கல்லறை மயானம் கண்டறியப்பட்ட இடம்.

(1) இப்பன் கட்டுவ (2) உடரஞ்சாமடம் (3) ராவண எல்ல (4) கல்சொகன்

129) கி.மு. 700 – 450 காலகட்டத்திற்குரிய இப்பன்கட்டுவ கல்லறை மயானத்தினைப் பயன்படுத்தியவர்களாகக் கருதப்படுபவர்கள்.

(1) கமிக (2) குர்க்கபதி (3) பருமக (4) கிரமிக

130) உடரஞ்சாமடம என்னும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது வெள்ளை நிறப்பின்னணியில் சிவப்பு நிறக் கோடுகள் மூலம் வடிவமைக்கப்பட்ட பாத்திரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அப்பாத்திரத்தின் பெயர்.

(1) கடக்கு (2) சாடி (3) குடம் (4)மடக்கு

131) குடும்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய குடும்பத் தலைவனுக்கு பிராமிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர்.

(1) கமிக (2) போஜக (3) குர்ஹபதி (4) கிராமிக

132) பருமக மாரிடையே பன்முகப்படுத்தப்பட்டிருந்த இலங்கையின் அரசியல் அதிகாரம் ஓரிடத்தில் குவிகின்ற தன்மையை ஏற்படுத்திய மன்னன்

(1) பண்டுகாபயன் (2) துட்டகைமுனு (3) வசபன் (4) தேவநம்பிய தீசன்.

133) சமயம், மொழி ரீதியில் வேறுபட்டிருந்தாலும் தமது அண்டை நாட்டுப் பிரஜைகளுடன் நம்பிக்கையுடன் செயற்படுவது இலங்கையை ஆட்சிசெய்த புராதன ஆட்சியாளர்களின் வெளிநாட்டுக் கொள்கையாகும். மேற்படி கூற்றுடன் தொடர்புடைய மன்னன்.

(1) 1ம் பராக்கிரமபாகு (2) நிசங்கமல்லன் (3) விக்கிரம பாண்டியன் (4) 1ஆம் விஜயபாகு

134) புராதன காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்ட கூட்டத்திற்கு வழங்கப்பட்ட பெயர்.

(1) ஆம்ல (2) காலசுமண (3) வாணிஜ (4) புகய

135) வலகம்பா மன்னன் காலத்தில் நூலுருப் பெற்ற திரிபீடகத்திற்கு மேலதிக விளக்கமான அட்டுவாக்களை எழுதிய தேரர்

(1) குப்பிகல திஸ்ஸ தேரர் (2) புத்தகோச தேரர்

(3) ஸ்ரீ சுமங்கல தேரர் (4) காரகல வனரத்ன தேரர்

136) திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற இந்துக் கோவில்களுக்கு அருகே இருந்த துறைமுகங்கள் முறையே.

(1) மகாதித்த, கலாதித்த (2) பிம்மதித்த, நில்வளதித்த

(3) சூரகதித்த, கிம்மதித்த (4) மகாதித்த, கோகன்னதித்த

137) புராதன இலங்கையில் இரும்புத்தாதிலிருந்து இரும்பைப் பிரித்தெடுப்பதற்கான தொழில்நுட்பத்திற்குச் சான்றாக விளங்குகின்ற இரும்பை உருக்கும் சூளை கண்டறியப்பட்ட இடம்.

(1) சமனல வெவ (2) பெரகல (3) ஹல்துமுல்ல (4) உடரஞ்சாமடம

138) சமுதாய நீதியை பாதுகாக்க நடைமுறைப் படுத்தப்பட்ட சட்டங்களை மீறுவோருக்கு தண்டனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட நீதிமன்றத் தொகுதிகள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

(1) பதுளைத் தூண் கல்வெட்டு (2) சிந்துல்பவ்வ கல்வெட்டு

(3) தோணிகல கல்வெட்டு (4) வேவல்கட்டிய தூண் கல்வெட்டு

139) கீழ்வரும் கூற்றுக்களை அவதானிக்க.

அரசியல் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டமை , சிறிய நகரங்களின் உருவாக்கம்

மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய நகரங்களின் சோடி பின்வருவனவற்றுள் எது.

(1) அநுராதபுரம், பொலநறுவை (2) அநுராதபுரம், தம்பதெனியா

(3) குருநாகல், தம்பதெனியா (4) பொலநறுவை, குருநாகல்

140) கீழ்வரும் வரலாற்று நிகழ்வுகளை அவதானிக்குக.

A - நான்கு கோறளைப் பகுதியின் நிர்வாகியாக இருந்த அம்புலுகலகுமாரன் 8ம் வீரபராக்கிரமபாகு என்னும் பெயரில் அரசனாதல்.

B - கலிங்க மாகன் தோற்கடிக்கப்படல்

C - சீனத்தளபதி செங்ஹோ வீர அழகேஸ்வரனுடன் போரிட்டு அவனைக் கைதியாக்கி சீனாவிற்குக் கொண்டு சென்றமை

D - ஜாதகக் கதைகள் பன்சிய பனஸ்ஜாதகய என்னும் பெயரில் மொழி பெயர்க்கப்பட்டமை

மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளை அவை இடம்பெற்ற கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையாது?

(1) ADCB (2) DCBA (3) BDAC (4) BDCA

141) 2ம் பராக்கிரமபாகு மன்னன் கல்வி கற்ற பௌத்த பிக்குகளின் தலைவர்

(1) சங்கரக்கித மகாதேரர் (2) வீதாகம மஹாஸ் வீர

(3) காரகல வனரத்ன தேரர் (4) இறுகல் குலதிலக தேரர்

142) யமசிங்க பண்டாராவின் பின் கண்டி இராச்சியத்தில் புதியதோர் அரச வம்சத்தினை ஆரம்பித்து வைத்த மன்னன்.

(1) 1ம் இராஜசிங்கன் (2) 2ம் இராஜசிங்கன்

(3) 1ம் விமலதர்மசூரியன் (4) 2ம் விமலதர்மசூரியன்

கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 143ம், 144ம் வினாக்களுக்கு விடை தருக

| மன்னன் | இளமைக்காலப் பெயர் | பணி |
|---|---|---|
| A – 1ம் விமலதர்மசூரியன் | D – டிக்கிரிபண்டார | G போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து துரத்தினான் |
| B – 2ம் இராஜசிங்கன் | E – கோணப்பு பண்டார | H - முல்லேரியாப் போர் |
| C – 1ம் இராஜசிங்கன் | F - மகா அஸ்தான குமாரன் | J - தெல்கம் விகாரையில் இருந்த புனித தந்ததாதுவைக் |

143) டிக்கிரி பண்டார என்ற இளமைக் காலப் பெயரைப் பெற்றவர் மன்னனான பின் சூடிக் கொண்ட பெயரையும் அவரது பணியையும் குறிப்பிடும் விடை எது?

(1) A,I (2) C,H (3) B,F (4) C,G

144) 1ம் விமலதர்ம சூரியனின் இளமைப்காலப் பெயரினையும் அவரது பணியையும் குறிக்கும் விடை எது?

(1) E,J (2) F,H (3) D,J (4) E,G

145) கண்டி இராட்சியதில் புனித தந்ததாதுவிற்குப் பொறுப்பான அதிகாரி

(1) கஜநாயக்க நிலமே (2)சனுவடன நிலதேம (3) பத்வடன நிலமே (4) தியவடன நிலமே

146) இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேயர் ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது கவனம் செலுத்தாமைக்கான காரணம்

(1) கறுவா, மிளகு போன்ற வர்த்தகப்பயிர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் கிடைக்காமை
(2) யாழ்ப்பாண இராட்சியத்தின் இயற்கை அரண்
(3) யாழ்ப்பாண இராச்சியம் போத்துக்கேயருக்குக் கப்பம் செலுத்தாமை
(4) சைவக்குருக்கள்மார் போர்த்துக்கேயரை எதிர்த்தமை.

கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 147ம் 148ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – ஜோன் டொயிலி B – மியூரன் குழு C – பிரட்டிக் நோர்த்
D – தோமஸ் மெயிட்லண்ட் E – மெக்டோவல்

147) 1803ம் ஆண்டு கண்டி இராச்சியத்தின் மீது படையெடுப்பை மேற் கொண்ட ஆளுநரையும் தளபதியின் பெயரையும் தரும் எழுத்துக்கள்.

(1) D, A (2) C, B (3) C, E (4) C, A

148) கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கான பின்னணியைத் தந்திரமாக உருவாக்கிய ஆளுநரையும், அரச அதிகாரியையும் தரும் விடை

(1) D, A (2) C, A (3) B, A (4) D, E

149) 1848 இல் பல புதிய வரிகளை விதித்த பிரித்தானிய ஆளுநர்

(1) தோமஸ் மெயிற்லட்ன் (2) பிறடிக் நோர்த் (3) டொரிங்டன் (4) றொபேட் பிறவுன்றிக்

150) இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குதலுடன் தொடர்புடைய அரசியல் யாப்பு

(1) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (2) சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(3) 1972 அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (4) 1978 அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

151) இலங்கையின் சிறு ஏற்புமதிப் பயிச்செய்கை தொடர்பான ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A – குண்டசாலை B – தெல்பிட்டி C – நாரம்மலை

D – கடலாதெனிய E – மாத்தளை

மேற்குறித்த சிறு ஏற்றுமதி தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்களுள் முதன் முதலாக 1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனத்தினைத் தரும் விடை

(1) A (2) B (3) C (4) E

152) இலங்கையில் உள்ள செல்வந்தர்களிடமும், சீன நாட்டு அரசின் உதவியும் பெற்று பலத்கம தர்மாலங்கார ஸ்ரீ சுமண திஸ்ஸ தேரரால் 1862 இல் காலியில் முதன் முதலாக நிர்மாணிக்கப்பட்ட அச்சகம் பின்வருவனவற்றுள் எது?

(1) லங்கஉபகார அச்சகம் (2) லங்கா பிருவவிஷ்ரத் அச்சக
(3) கவடகதிக அச்சகம் (4) சரசவி சங்கரெஸ அச்சகம்

153) மறுமலர்ச்சி முதன்முதலாக ஆரம்பமான இத்தாலிய நகரம்
(1) மிலான் (2) வெனிஸ் (3) புளோரன்ஸ் (4) கொறிந்

154) பல்வேறு கண்டுபிடிப்புக்களை செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் B – ஜோன் லொகி பெயாட்

C – ஜோர்ஜ் ஸ்டீவன்சன் D – மார்க்கோனி E – டெம்லர்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுள் கைத்தொழிற் புரட்சியின் போது போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்களைச் செய்தவர்களைக் தரும் விடை

(1) B, C (2) C, D (3) E, A (4) C, E

155) கைத்தொழில் புரட்சியினால் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தரும் விடையைத் தெரிவு செய்க.

(1) சேரிப்புறங்கள் உருவாகியமை (2) சூழல் மாசடைந்தமை
(3) தன்னிறைவுப் பொருளாதார முறை வீழ்ச்சியடைந்து சம்பளத்திற்கு வேலை செய்யும் தொழி-லாளர் வகுப்பு ஒன்று தோற்றம் பெற்றது.
(4) குடும்பங்களில் மதுபாவனையின் பயன்பாடு, தவறான செயல்களில் ஈடபடுதல் நெறிபிறழ்ந்த வாழ்க்கைமுறை ஏற்பட்டது.

கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 156 தொடக்கம் 158 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1. 2ம் உலகமகாயுத்தம் 2. ஐக்கிய நாடுகள் சபை

B – 1. அமெரிக்கப் புரட்சி 2. பொஸ்டன் தேநீர் விருந்து

C – 1. பிரான்சியப் புரட்சி 2. உணவு, நிலம், சகோதரத்துவம்

D – 1. வி.ஜெ.லெனின் 2. ரஷ்யப் புரட்சி

156) முதலாவது நிகழ்வினால் இரண்டாவது உருவாகக் காரணமாக இருந்த விடயங்களைத் தரும் விடைச் சோடி

(1) B (2) A (3) D (4) C

157) இரண்டாவது நிகழ்வு முதலாவது ஏற்படுதவற்குக் காரணமாக அமைந்தது இதனைத் தரும் விடைச் சோடி.

(1) B (2) A (3) D (4) C

158) முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்பினையும் தராத விடைச் சோடி

(1) B (2) A (3) D (4) C

159) 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மன் மொழி பேசிய 350 சிறிய நாடுகளை ஒன்றிணைத்து ஜேர்மனி என்ற நாட்டை உருவாக்கியவர்.

(1) ஒட்டோவொன் பிஸ்மார்க் (2) இரண்டாம் வில்லியம்

(3) பிரான்சிஸ் பேர்டினன்ற் (4) அடோல்ப் ஹிட்லர்

160) ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள நாட்டினையும் நகரத்தினையும் தரும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) பிரித்தானியா – லண்டன் (2) நெதர்லாந்து – ஹேக்

(3) ஜேர்மனி – மீனுச் (4) பிரான்ஸ் – பரிஸ்

**2019**

161. மகாவம்சத்தில் முதலாம் பாகம் எழுதப்பட்டு நான்கு நூற்றாண்டுகளின் பின் அதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் பாளி மொழியில் எழுதப்பட்ட உரை நூல் எது?

(1) வம்சத்தப்பாசினி (2வினய அட்ட கதா (3) சிஷல வங்சகதாவ (4) சியபஸ்லகர.

162. எமது கலாசார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் உயிரோட்டமான சாட்சியங்களை உள்ளடக்கிய விடை பின்வருவனவற்றுள் எது?

(1) சமய நம்பிக்கைகள் வழக்காறுகள் மற்றும் பழக்கவழக்கங்கள்

(2 சிகிரிய ஓவியங்கள்,கற்றூண்கள் மற்றும் குளங்கள்

(3) பண்டைய சித்திரங்கள் சிலைகள் மற்றும் செதுக்கல்கள்

(4) கல்வெட்டுக்கல்,கட்டிட நிர்மாணங்கள் மற்றும் சித்திரங்கள்

163. இலங்கையின் பல்வெறு பிரதேசங்களிலும் கண்டறியப்பட்டுள்ள கருங்கல்லில் செதுக்கப்பட்ட சூரிய சந்திர உருவங்கள் மாட்டு கொம்பு, யானையின் பாத சுவடு போன்றன எதனை வெளிப்படுத்தும் அடையாளங்களாகும்?

(1) சௌபாக்கியம். (2) பிரதேச எல்லைகள் (3) நிலைத்த தன்மை. (4) அரச உரிமை.

164. இலக்கிய மூலாதாரங்களுடாக தகவல்களை பெற்றுக்கொள்ளும்போது இறந்த காலத்தை மிகச்சரியாக புரிந்துகொள்ள அவற்றை தர்க்க ரீதியான சிந்தனையுடன் நோக்க வேண்டியதன் அவசியம் யாதெனில்

(1) வரலாற்று நிகழ்வுகளை விட பிற்கால நிகழ்வுகள் அதில் இடம்பெறுவதனாலாகும்

(2) வரலாற்று நிகழ்வுகளை விட சமகால நிகழ்வுகள் அதில் உள்ளடங்குவதனாலாகும்

(3) இதில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் பெரும்பாலும் உண்மைத்தன்மையற்றவையாக இருப்பதனாலாகும்

(4) இவற்றில் நூலாசிரியரின் விருப்பு வெறுப்புக்கள் உள்ளடங்கி இருப்பதனாலாகும்

165.வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த சுற்றாடல் வலயங்களை நிர்மாணிக்கையில் கவனத்திற் கொள்ளப்பட்ட பிரதான காரணியாக அமைவது?

(1) வேட்டையாடுதலின் மூலம் உணவை பெற்றுக் கொள்ளல்.

(2) இயற்கை வளங்களின் பரம்பல். (3) இயற்கை தாவர வலயங்கள்.

4) வருடாந்த மழைவீழ்ச்சியின் அளவு.

166. முன் வரலாற்று கால பெண்கள் தம்மை அழகுப்படுத்திக் கொள்வது தொடர்பில் உடாஞ்சாமட வீட்டில் இருந்து கிடைக்கப்பெற்ற ஆதாரமொன்று அல்லாதது

(1) கண்ணுக்கு மை தீட்டுவதற்காக பயன்படுத்திய உலோக குச்சி

(2) இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மணிகலை கொண்ட கழுத்து மாலை,

(3) உடம்பில் வர்ணம் பூசுவதற்கு பயன்படுத்தப்பட்ட மஞ்சள்.சிவப்பு நிற கற்கள்.

(4) சுட்டுப் பதப்படுத்தப்பட்ட மண்ணாலான மணி

167. நதிகளுக்க அப்பால் உள்ள பிரதேசங்களில் தோற்றம் பெற்ற ஆரம்ப வரலாற்று கால குடியிருப்புக்கள் தொடர்பில் மிக சிறந்த உதாரணமாக அமைவது

(1) வளவ கங்கையை அண்டிய பிரதேசம் (2) மல்வத்துஓயாவை அண்டிய பிரதேசம்

(3) கிரிந்தி ஓயாவை அண்டிய பிரதேசம் (4) களனி கங்கையை அண்டிய பிரதேசம்

168. நிரல் ஒன்றில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய நிரல் இரண்டில் தரப்பட்டுள்ள வரலாற்று நூல்களை தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் மிக சரியான விடையாக அமைவது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1.புராதான கிராமம் ஒன்றின் ஏழை குடியானவன் ஒருவன் கமிகவிடம் தெல்மூடை ஒன்றினை கடனாக பெற்றமை | A – புத்சான |
| 2. குடும்ப தலைவர்களில் இருந்து கமிக தெரிவு செய்யப்பட்டமை | B – நம்பியா அட்டுவா கெடபதய |
| 3. புராதன சேனைகள் “செஹென்” என குறிப்பிடப்பட்டமை | C – ஜாதக அட்ட கதா |
| 4. சமையற் கலையில் சிறந்து விளங்கிய பெண்கள் மதுபாசிகா என குறிப்பிடப்பட்டுள்ளமை | D – சத்தர் மலங்காரய |
| | [illegible] |

(1) ABCD (2) BCDE (3) CEAB (4) CEDB

169. இலங்கையை ஆட்சி புரிந்த அரச வம்சங்கள் பற்றி வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன அவற்றுள் இலம்பகர்ண வம்சத்திற்கு உரிய அரசர்களை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது.

(1)தாதுசேனன் 1ம் விஜயபாகு (2)வசபன் 1ம் விஜயபாகு

(3)1ம் கஜபாகு பாதிகாபயன் (4) பாதிகாபயன்,வசபன்

170. அரசின் மேன்மையை வெளிப்படுத்தும் வகையில் புராதான கால அரசர்கள் பல்வேறு விதங்களில் தோற்றம் தர விரும்பியுள்ளனர் அக்கொள்கைகளின் அடிப்படையில் மக்கள் மன்னனிடம் இருந்து எதிர்ப்பார்க்கும் விடயமாக அமைவது

(1) முன்மாதிரி,நேர்மை (2) ஆக்கிரமிப்பு,தீவிரப்போக்கு

(3) பொதுநலம் (4) கடும் தீர்ப்பு,நெகிழ்வற்றத் தன்மை

171. நாகவப்ப விகாரையின் தாது கற்பத்தில் வைக்கப்பட்டுள்ள மகா மெரு கல்லில் செதுக்கப்பட்ட சிற்பத்தின் ஊடாக வெளிப்படுத்தும் பொருளாதார நடவடிக்கையாக அமைவது

(1)விவசாயம் (2) மாணிக்கக் கைத்தொழில் (3) விலங்கு வளர்ப்பு (4) மீன்படி

172.இராசரட்டை நாகரிக காலத்தில் பாலி,சமஸ்கிரதம்,சிங்கள மொழிகளில் எழுதப்பட்ட இலக்கிங்களை ஒழுங்க முறையில் காட்டும் விடையாக அமைவது

(1)அனுருத்த சதகய,தீபவம்சம்,பால வதாரய (2)சாராபிரதீபதி,ஜானகிஷாயை,சியபஸ்லகர

(3)தீபவம்சம்.சாராபிரதிபதி,சியபஸ்லகர (4) அனுருத்த சதகய,ஜானசிஹரயை,சியபஸ்லகர

173. கொண்டபெட்டுவான் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி உரிய காலதத்தில் அறுவடை செய்ய தவரும்

(1) சுற்றாடலின் துாய்மையை பாதுகாத்தல். (2)நெல் அறுவடையை அதிகரித்தல்

(3) வயல் நிலங்களின் மண்வளத்தை பாதுகாத்தல்

(4)மழை காலத்தில் அறுவடைசெய்வதன் மூலம் ஏற்படும் மண்ணரிப்பை தடுத்தல்.

174. மகாவலி கங்கை கரையில் சிவனொளிபாத மலைக்கு செல்லும் பாதையில் அமைந்துள்ள இராசதானியின் முதல் ஆட்சியாளன்

(1)1ம் புவனேகபாகு (2) 2ம் புவனேகபாகு (3)3ம் புவனேகபாகு (4) 4ம் புவனேகபாகு

175. கிழே தரப்பட்டுள்ள விடயங்களுள் கண்டி இராசதானியின் ஆட்சியாளனான முதலாம் விமலதர்மசூர்யனின் பொருளாதார பணிகளை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது

A – வெடி மருந்துக்கு தேவையான உப்ப கைதொழிலை விருத்தியடைய செய்தமை.

B – விகாரைகளை புணர்நிர்மாணம் செய்தமை.

C – விவசாய நடவடிக்ககைளை விருத்தி செய்தமை

D – கண்டி இராசதானியில் ஆட்சியதிகாரத்தினை நிலைநாட்டியமை

(1) AD (2) AC (3) BC (4) BD

176. கண்டி இராசதானியின் வரலாற்று நிகழ்வுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – நாயக்க வம்சத்தினர் ஆட்சி பீடம் ஏறியமை.

B – வெளிவட்ட சரணங்கர தேரருக்க சங்கராஜா பதவி வழங்கப்பட்டமை.

C – விவசாய நடவடிக்கைகளை விருத்தி செய்தமை.

D –சீயம் நிகாய பிரிவு இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டமை. இவற்றுள் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனுடன் தொடர்புடைய நிகழ்வுகளை மாத்தரம் கொண்ட விடையாக அமைவது

1. AB 2.BD 3.AC 4.BC

177. கண்டி இராசதானியின் நில உரிமை பற்றிய விடயங்களை 1ம் நிரலிலும் அவற்றை அனுபவித்தல் தொடர்பான விடயங்கள் 2ம் நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| I நிரல் | II நிரல் |
|---|---|
| i. நிந்தகம் | A அரச மாளிகைக்காக பயன்படுத்தப்பட்டவை |
| ii. பரவேணிகம் | B பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்டவை |
| iii. கபடாகம் | C தேவாலயங்களுக்கு தானமளிக்கப்பட்டவை |
| | D கிராமத்தவர்கள் பரம்பரையாக அனுபவித்தமை |

நிரல் ஒன்றினை நிரல் இரண்டுடன் பொருத்தும் போது பெறப்படும் சரியான விடை?

(1) A B C (2) B C D (3) B D A (4) A D B

178.போர்த்துகேயரின் இலங்கை வருகையின் போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன்?

(1) ஆரிய சக்கரவர்த்தி (2) சங்கிலி (3)பரராசசேகரம் (4) புவிராச பண்டாரம்

179. இரண்டாம் இராஜசிங்கன் ஒல்லாந்தரை இந்நாட்டுக்கு வரவழைத்தமைக்கான நோக்கங்களை உள்ளடக்கிய விடை

(A) வர்த்தக ஏகபோக உரிமையை ஒல்லாந்தருக்கு வழங்குதல்.

(B) ஒல்லாந்தரின் உதவியை பெற்று போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து வெளியேற்றதல்.

(C) ஒல்லாந்தருக்கு கண்டியின் ஆட்சி உரிமையை வழங்குதல்.

(D) போர்த்துகேயரின் கீழ் இருந்து பிரதேசங்களை கண்டியுடன் இணைத்து சுதந்திர இலங்கையை தோற்றுவித்தல்.

(1) A B (2) B D (3) B C (4) C D

180. கிழே தரப்பட்டுள்ள விடயங்களுள் உள்நாட்டு வர்த்தகம் தொடர்பான விடயங்களை

மாத்திரம் உள்ளடக்கிய விடை

(A) நானாதேசிகளுக்கு உரித்தான முத்திரை ஒன்று அம்பாந்தோட்டையில் கண்டறியப்பட்டுள்ளமை.

(B) சிகிரியாவின் மேற்கில் உள்ள நீர் பூங்கா கல்வெட்டில் புளி வியாபாரி ''அபல வபல'' எனும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளமை.

(C) போவத்தேகல கல்வெட்டில் காம்போஜர்களின் பெரு வர்த்தக அமைப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளமை.

(D) சொரபொர வாவி கல்வெட்டில் ஹோம்பிட்டிகம சந்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளமை.

(1) A B (2) A C (3) B C (4) B D

181.கீழே தரப்பட்டுள்ள காரணிகளுள் கூடிய வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனி பின்பற்றிய இரு வழி முறைகளை காட்டும் விடையாக அமைவது.

(A) வரசேகரித்தலுக்காக அவுமில்தார்களை நியமித்தல்

(B) கறுவா வரியை அதிகரித்தமை.

(C) வரியை பணமாக செலுத்தும் முறையினை அறிமுகப்படுத்தியமை

(D) முத்திரை வரியை அதிகரித்தமை

(1) A C (2) A D (3) B C (4) B D

182 1797இல் இடம்பெற்ற கிளர்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட குழு

(1)மியூரன் ஆணைக்குழு (2) ஹோல்புறுக் ஆணைக்கழு

(3) டொனமூர் ஆணைக்குழு (4) சோல்பரி ஆணைக்குழு

183. 1815 ஆளுனர் ரொபட் பிரொன்றிக் கண்டி இராசதானிக்கு எதிராக யுத்த பிரகடனம் செய்தமைக்கான உடனடி காரணமாக அமைவது

(1) கண்டி இராசதானியுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ளும் முயற்சி தோல்வியடைந்தமை.

(2) கரையோரத்தில் இருந்த கண்டிக்கு சென்ற வர்த்தகர்களின் கை,காது என்பவற்றை வெட்டி திருப்பியனுப்பியமை.

(3) கண்டிய மன்னன் மிக கடுமையான தண்டனைகளை வழங்கியமை.

(4) எஹெலபொலவின் மனைவிமார் பிள்ளைகளை மனிதாபிமானமற்ற முறையில் கொன்றமை.

கீழே தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டு 184,185 ஆம் வினாக்களுக்கு விடை தருக..

A –பிலிமத்தலாவை மகா அதிகாரம் மரணதண்டணைக்குட்படல்.

B -இரட்டையாட்சி முறை அதிகமாதல்.

C – கண்டியின் மடுல்மடுவ மண்டபத்தில் கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை.

D – ஜோன்டொயிலி கண்டி இராச்சியத்துடன் தொடர்பினை ஏற்படுத்தியமை.

184. மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளை கால அடிப்படையில் ஒழுங்குப்படுத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது.?

(1) B,A,C,D (2) B,C,A,D (3) B,D,A,D (4) C,B,A,D

185. C எனும் எழுத்தினால் தரப்பட்டுள்ள கூற்றுடன் தொடர்புடைய பிரித்தானிய ஆளுனர்

(1) பிரடரிக்நோர்த் (2) தோமஸ் மெயிட்லண்ட (3) டொரின்டன் பிரபு (4)றொபட் பிரொன்றிக்

186. அநகாரிக்க தர்மபால, வலிசிங்க ஹரிசந்திர, ஜோன்த சிலவா,பியதாஸ சிரிசேன இலங்கையின் தேசிய மறுமலர்ச்சி காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட தலைவர்கள் செயற்பட்ட விதம் தொடர்பில் பொது தீர்மானமாக கருதக்கூடியது.

(1) பௌத்த நூல்களை எழுதுவதனூடாக சமய பற்றினை ஏற்படுத்துதல்.

(2) தேசிய உணர்வினையும் தேசாபிமானத்தினையும் வளர்த்தல்

(3) பௌத்த புனித தலங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(4) நாடகங்கள் மூலமாக மக்கள் மத்தியில் தேசிய உணர்வினை ஏற்படுத்தல்.

187. கீழே தரப்பட்டுள்ள அரசியல் யாப்பு சீர்த்திருத்தங்கள் மற்றும் அவற்றின் ஆலோசனைகளை மிக சரியாக தொடர்புபடுத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது.

| I | | II | |
|---|---|---|---|
| 1. | ஹோல்புறுக் யாப்பு சீர்த்திருத்தம் | A | ஆளுனர் நாயகம் பதவி அறிமுகம் |
| 2. | குரு மக்கலம் சீர்த்திருத்தம் | B | வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டமை |
| 3. | டொனமூர் யாப்பு சீர்த்திருத்தம் | C | கட்டாய சேவை இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை |
| 4. | சோல்பரி யாப்பு சீர்த்திருத்தம் | D | சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை |

(1) C A B D (2) C B A D (3) C B D A (4) B A C D

188. I நிரல் ஒன்றில் விவசாயப் பயிர்களும் நிரல் இரண்டில் அவற்றக்கான ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்தள்ள இடங்களும் தரப்பட்டுள்ளன அவற்றை மிக சரியாக தொடர்புபடுத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது

| I நிரல் | II நிரல் |
|---|---|
| 1. இறப்பர் | A – லுனுவில |
| 2. தேயிலை | B -மாத்தளை |
| 3. தென்னை | C -தலவாக்கலை |
| 4. சிறு ஏற்றுமதி பயிர்கள் | D -அகலவத்தை |

(1) A D C B (2) B A D C (3) D B C A (4) D C A B

189.இலங்கையில் தோற்றம் பெற்ற அரசியல் கட்சிகளுள் மிகவும் பழமையான கட்சிக்கு தலைமைத்துவம் வழங்கிய நபர்

(1).ஏ.ஈ.குணசிங்க. (2)என்.எம்.பெரேரா 3). எஸ்.ஏ.விக்ரமசிங்க (4) S.J.V.செல்வநாயகம்

கீழே தரப்பட்டுள்ள தகவல்களை பயன்படுத்தி வினா இலக்கம் 190இற்கு விடையளிக்கவும்.

A. லங்கா (இலங்கை) ஸ்ரீ லங்கா எனும் பெயரில் அழைக்கப்பட்டமை.

B. விகிதாசாரா பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.

C. இலங்கை குடியரசாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை.

D. அடிப்படை மனித உரிமைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளமை.

190.1972 முதலாம் குடியரசு யாப்பு தொடர்பில் சரியான கூற்றினை தெரிக.

1. A உண்மையற்றது B உண்மையானது 2. B,C உண்மையற்றவை

3. A உண்மையானது D உண்மையற்றது 4. B உண்மையானது C உண்மையற்றது

191. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்று தொடர்பில் நேரடியாக மக்களின் கருத்துக்கணிப்பினை பெற்றுக் கொள்ளும் முறையாக அமைவது

1. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு 2. மாகாண சபை தேர்தல்

3. பொது தேர்தல் 4. உள்ளூராட்சிமன்ற தேர்தல்

192. ஐரோப்பிய மறுமலர்ச்சி காலம் எழுத்தாளர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன

1. தாத்தே 2. பெற்றாக் 3. பிரான்ஸிஸ் பேகன் 4. தோமஸ் மூர்

இவர்களுள் "லோராவிற்கு எழுதிய கவிதை மற்றும் டிவினா கொமிடியா எனும் காவிய நூல்களை எழுதிய எழுத்தாளர்கள் இருவரை கொண்ட விடை

1.A,B 2.A,E 3.B,A 4.C,D

கீழே அட்டவணையின் A முதல் I வரையான தகவல்களை கொண்டு 193ஆம், 194ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| கண்டுபிடிப்பாளர்கள் | கண்டுபிடிப்புகள் | துறைகள் |
|---|---|---|
| A.ஜேம்ஸ் ஹாக்ரிவ்ஸ் | D.நீராவி என்ஜின் | G.இரும்பு உற்பத்தி |
| B.ஹென்றி பேஸ்மர் | E.ஜெனி இயந்திரம் | H.எரிபொருள்/நிலக்கரி |
| C.கேம்ஸ் வோட் | F.திறந்த உருக்கு உலை | I.நெசவு கைதொழில் |

193. எரிபொருள் உற்பத்தியோடு தொடர்புடைய செயற்றிறன் மிக்க இயந்திரம், நிர்மாணித்த நபர் என்பவற்றை உள்ளடக்கியுள்ள எழுத்து சோடி

1.A,E 2.A,D 3.B,F 4.C,D

194. ஜெனி இயந்திரத்தினை கண்டுபிடித்த நபரையும் அது உரித்தாகும் கைத்தொழிற் துறையையும் உள்ளடக்கியுள்ள எழுத்து சோடி

1.A,I  2.B,G  3 A,H  4.C,I

195. நோய்ப்பரம்பலை குறைப்பதற்கும்,வினைத்திறனை அதிகரிப்பதற்குமாக பின்பற்றப்பட்ட சூழல் நேய முறையாக அமைவது

1.இரசாயன உரப்பாவனை  2.பாரம்பரிய முறைகளை பின்பற்றல்
3.நிலமாற்று முறை  4.கிருமிநாசினிகள் பாவனை

196. உலகில் நடைபெற்ற பிரதான புரட்சிகளுடன் தொடர்புடையை தகவல்கள் கீழே தரப்பட்டுள்ள அவற்றுள் அமெரிக்க சுதந்திர போருடன் தொடர்புடைய இரு தகவல்களை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது

A.டெனிஸ் மைதான உறுதிமொழி  B.கெரன்ஸ்கி ஆட்சிக்க வரல்
C.பொஸ்டன் தேநீர் விருந்து  D.பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்படல்
E.பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை

1.A,B  2.A,D  3.C,E  4.D,E

கீழே A முதல் d வரை தரப்பட்டுள்ள சோடிகளை கருத்திற்கொண்டு 197 முதல் வரையான வினாக்களுக்கு விடையளிக்க

A : நாரிசவாதம்  B : கைத்தொழிற்புரட்சி
: ஹிட்லர்  : சுற்றாடல் மாசடைவு
C :இரண்டாம் உலகப்போர்  D :சர்வதேச சங்கம்
:லுசுதானியா கப்பல் மூழ்கடிக்கப்படல்  :இரண்டாம் உலகப் போர்

197. இரண்டாவதின் அதிகரிப்பிற்கு முதலாவது காரணமாக அமையும் சோடி

1.A  2.B  3.C  4.D

198.முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையே எவ்வித தொடர்பும் அற்ற சோடி

1.A  2.B  3.C  4.D

199.முதலாவதின் வீழ்ச்சி இரண்டாவதின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைந்த சோடி

1.A  2.B  3.C  4.D

200.உலகில் சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளுக்கு இலங்கை எந்த வகையில் தமது பங்களிப்பினை வழங்குகின்றது.

1.பாதுகாப்பு சபையை பிரதிநிதித்துவப்படுத்துதல் 2.பொருளாதார தடை விதித்தல்
3.சமாதான படைகளை அனுப்புதல்  4.அனுவாயுத கட்டுப்பாடுகளை விதித்தல்.